# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

* பத்தாம் வகுப்பு பதிவு எண் :

## சமூக அறிவியல்

நேரம் : 3.00 மணி பகுதி - அ மதிப்பெண்கள் : 100

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 14 x 1 = 14

1. 'ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம்' எனக் கூறியவர் யார்?
   அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன்யாட் சென் ஈ) மாசேதுங்
2. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது?
   அ) கவாசாகி ஆ) டோக்கியோ இ) ஹிரோஷிமா ஈ) நாகசாகி
3. எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்டது?
   அ) 1827 ஆ) 1829 இ) 1826 ஈ) 1927
4. திருச்சிராப்பள்ளி சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டவர் யார்?
   அ) மருது சகோதரர்கள் ஆ) பூலித்தேவர்
   இ) வீரபாண்டிய கட்டபொம்மன் ஈ) கோபாலநாயக்கர்
5. இந்தி எதிர்ப்பு மாநாடு எங்கே நடத்தப் பெற்றது?
   அ) ஈரோடு ஆ) சென்னை இ) சேலம் ஈ) மதுரை
6. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு
   அ) நர்மதா ஆ) கோதாவரி இ) கோசி ஈ) தாமோதர்
7. இந்தியாவின் காலநிலை _______ ஆக பெயரிடப்பட்டுள்ளது.
   அ) அயன மண்டல ஈரக் காலநிலை ஆ) நிலநடுக்கோட்டு காலநிலை
   இ) அயனமண்டல பருவக்காற்று காலநிலை ஈ) மித அயன மண்டலக் காலநிலை
8. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் மாங்குரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் எது?
   அ) இராமநாதபுரம் ஆ) நாகப்பட்டினம் இ) கடலூர் ஈ) தேனி
9. மிக அதிகமாகக் கிடைக்க கூடிய ஆற்றல் வளம்
   அ) உயிரிசக்தி ஆ) சூரியன் இ) நிலக்கரி ஈ) எண்ணெய்
10. தேசிய காற்றாற்றல் நிறுவனம் (NIEW) அமைந்துள்ள இடம்?
    அ) கன்னியாகுமரி ஆ) சென்னை இ) டெல்லி ஈ) மும்பை
11. இந்தியாவில் முதன்முதலில் உயர்நீதிமன்றங்கள் தொடங்கப்பட்ட இடங்கள்
    அ) கொல்கத்தா, மும்பை, சென்னை ஆ) டெல்லி மற்றும் கொல்கத்தா
    இ) டெல்லி, கொல்கத்தா, சென்னை ஈ) கொல்கத்தா, சென்னை, டெல்லி
12. எத்தனை நாடுகள் இந்தியாவுடன் தன் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன?
    அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 8
13. முதன்மை துறை இதனை உள்ளடக்கியது.
    அ) வேளாண்மை ஆ) தானியங்கிகள் இ) வர்த்தகம் ஈ) வங்கி
14. ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுவது _______?
    அ) தூத்துக்குடி ஆ) கோயம்புத்தூர் இ) சென்னை ஈ) மதுரை

பகுதி - ஆ

II. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 28 கட்டாய வினா) 10 x 2 = 20

15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
16. இராமலிங்க அடிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.
17. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தொகுத்து வழங்கவும்.
18. பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.
19. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?
20. தக்காண பீடபூமி - குறிப்பு வரைக.
21. காலநிலையைப் பாதிக்கும் காரணிகளைப் பட்டியலிடுக.
22. நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக.

CamScanner
www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



23. 'தேரி' என்றால் என்ன?
24. தமிழ் நாட்டின் வேளாண் பருவக் காலங்களை எழுதுக.
25. அரசியலமைப்பு என்றால் என்ன?
26. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
27. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுதுக.
28. புவியியல் குறியீடு (GI Tag) - குறிப்பு வரைக.

பகுதி - இ

III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 42 கட்டாய வினா) 10 x 5 = 50

29. ***கோடிட்ட இடங்களை நிரப்புக.***
   i) நவீன சீனாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர் ________ ஆவார்.
   ii) வடமேற்கு எல்லை மாகாணத்தில் சட்டமறுப்பு இயக்கத்தை தலைமையேற்று நடத்தியவர் _____.
   iii) உலகிலேயே மிக நீளமான அணை ________.
   iv) ________ தமிழ்நாட்டின் மாநில விலங்கு ஆகும்.
   v) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி ________ ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.
30. முதல் உலகப் போருக்கான முக்கியக் காரணங்கள் விவாதி.
31. வேலூரில் 1806-இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.
32. ***அ) வேறுப்படுத்துக :***
   i) வடகிழக்கு பருவக்காற்று மற்றும் தென்மேற்கு பருவக்காற்று
   ii) புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்

   ***ஆ) காரணம் கூறுக :*** மழைநீர் சேமிப்பு அவசியம்.
33. தமிழ்நாட்டில் பிராமணரல்லாதோர் இயக்கம் தோன்றி வளர்ந்ததை ஆய்வு செய்க.
34. இந்தியத் தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.
35. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.
36. பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக.
37. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் விவரி.
38. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
39. பன்னாட்டு நிறுவனங்களின் (MNC) நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுதுக.
40. சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.
41. ***கீழ்க்காண்பனவற்றிற்கு காலக் கோடு வரைக :***
   1930 முதல் 1950 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய நிகழ்வுகளை ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் எழுதுக.
42. ***உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.***
   1) பிரிட்டன் (இங்கிலாந்து) 2) ஜெர்மனி 3) நாகசாகி 4) ஹவாய் தீவுகள் 5) இந்தியா

பகுதி - ஈ

IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். 2 x 8 = 16

43. அ) தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வே.ரா.பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும். ***(அல்லது)***

   ஆ) இரண்டாம் உலகப் போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
44. அ) ***கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.***
   1) மேற்கு தொடர்ச்சி மலை 2) தக்காண பீடபூமி 3) எவரெஸ்ட் 4) சணல் விளையும் பகுதி
   5) கரிசல் மண் 6) வடக்கு இரயில்வே மண்டல தலைமையிடம் 7) மேட்டூர் அணை
   8) பன்னா உயிர்க்கோள பெட்டகம் ***(அல்லது)***

   ஆ) ***கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்.***
   1) விமான நிலையங்கள் (சர்வதேச) - ஏதேனும் ஒன்று 2) பழவேற்காடு ஏரி
   3) வங்காளவிரிகுடா 4) காவிரி ஆறு 5) தொட்டபெட்டா
   6) கிழக்குத் தொடர்ச்சி மலைகள் 7) நெல்விளையும் பகுதி 8) பாக் ஜலசந்தி

********

CamScanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com